# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜூலை 12, 2025

Weekly E-paper • JJuly 5, 2025




## ஆகஸ்ட் 2
# வீரவணக்க நாள்!

சுப. வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## கோட்சே வழி வேண்டாம்

தலையங்கம்

## எடப்பாடியின் ரோட் ஷோவா? எடப்பாடியே ரோட்டில் ஷோவா?

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜூலை 12, 2025 Weekly E-paper • JJuly 5, 2025


## ஆகஸ்ட் 2

# வீரவணக்க நாள்!

சுப. வீரபாண்டியன்



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த போராளிகள் சிலர், ஐரோப்பிய நாடுகளிலிருந்து இரண்டு நாள்களுக்கு முன்னால் என்னிடம் தொலைபேசியில் உரையாடினர்!

தமிழ் ஈழத்திற்காகவும், அந்த மண்ணின் விடுதலைக்காகவும், தொடர்ந்து பல ஆண்டுகள் களத்தில் நின்று, பெரும்படை திரட்டிப் போராடி, உலக வரலாற்றில் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்த தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் வீரச் சாவிற்கு வரும் ஆகஸ்ட் 2 அன்று, சுவிட்விசர்லாந்தில் மிகப்பெரும் அளவில் வீரவணக்க நாள் கூட்டம் நடத்த இருப்பதாகவும், அதற்கு உலகத் தமிழர்கள் அனைவரின் ஆதரவும் வேண்டும் என்றும் கூறினார்கள்!

மாவீரர்களுக்கும் மரணம் உண்டு! ஆனால் அது மற்றவர்களின் மரணத்தைப் போன்றதன்று! தன் நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தன்னலம் துறந்து வாழ்நாள் முழுவதும் போராடி, களத்தில் வீரச் சாவு அடைவது என்பது உலகம் மறக்க முடியாத ஒரு வரலாற்று நிகழ்வு! அத்தகைய மாவீரர்கள் புதைக்கப்படுவதில்லை மண்ணில் – விதைக்கப்படுகிறார்கள்!

அவர்களின் வீர மரணத்தைத் தோல்வி என்று கருதி, தலைவர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டே இருப்பது அவருக்கு நாம் செலுத்த வேண்டிய மிகப்பெரும் வீர வணக்கத்திற்குத் தடையாக ஆகிவிடும்! இதனை உணர்ந்தே, போராளிகள் இயக்கத்தில் தலைவருடன் இருந்த மூத்தவர்கள் சிலர், இந்த முடிவை இப்போது எடுத்து இருக்கிறார்கள்!

நவம்பர்27-மாவீரர்கள்நாள்,மே18-முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பவைகளைத் தாண்டி, இப்போது ஏன் ஆகஸ்ட் 2 என்று ஒரு வினா எழலாம் !

ஏதோ ஒரு காரணம் கருதியே அவர்கள் இந்த நாளைக் குறித்திருக்கக் கூடும்! எனவே நாள் பற்றிய விவாதங்களுக்கு இடம் தராமல், உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள், தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் அந்த மாபெரும் தலைவனுக்கு அன்று வீரவணக்கம் செலுத்திட வேண்டும் என்பதே நம் விருப்பம்! ●

# பேரவையின் மேற்கு மண்டலக் கூட்டம்



மேற்கு மண்டலக் கலந்துரையாடல் கூட்டம் ஜூலை 06 ஞாயிறு காலை 11 மணிக்கு, ஈரோடு பெரியார் மன்றத்தில் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு தலைமையில் நடைபெற்றது. துணைப் பொதுச்செயலாளர் காசு நாகராசன், செயற்குழு உறுப்பினர் சூலூர் தேவராசு, திராவிட நட்புக்கழகத்தின் மண்டல அமைப்பாளர் வழக்குரைஞர் பழ. முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு மாநகர் மாவட்டச் செயலாளர் தோழர் அ. தமிழ்க்குமரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து, மாவட்ட வாரியாக தலைவர் செயலாளர்கள் இளைஞரணிச் செயலாளர் மற்றும் தோழர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து உரையாற்றினர்.

நிறைவாக, பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு பேரவைச் செயல்பாடுகள் மற்றும் பொதுக்குழு தீர்மானங்கள் ஆகியவை குறித்து உரையாற்றினார்.

தீர்மானங்கள் :

1) மேற்கு மாவட்டங்கள் சார்பில் திராவிட முழக்கம் இதழுக்கு இரண்டாயிரம் சந்தாக்களை சேகரிக்க பேரவையின் மாவட்ட அமைப்புகள் பணியாற்றிட வேண்டும்.

2) ஒவ்வொரு மாவட்டத்திலும் பேரவையின் இளைஞர் - மாணவர் அமைப்புகளையும், திராவிட நட்புக் கழகத்தையும் உருவாக்கி பேரவையை வலுப்படுத்தும் பணியில் மாவட்டச் செயலாளர்கள் முழுவீச்சில் செயல்பட வேண்டும்.

3) மாவட்டந் தோறும் பேரவை சார்பில், பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், கருத்தரங்குகள், கருஞ்சட்டைப் பதிப்பக நூல் வெளியீடுகள், படிப்பு வட்டக் கூட்டங்கள், திராவிடம் 100 மற்றும் திராவிட முழக்கம் வாசகர் வட்டக் கூட்டங்கள், கல்வி நிலைய வாயில் கூட்டங்கள், துண்டறிக்கைப் பரப்புரை என பேரவை சார்ந்த ஒரு வேலைத் திட்டத்தை வடிவமைத்து குறிப்பிட்ட கால இடைவெளியில் எல்லா மாவட்டங்களிலும் தொய்வின்றி நடத்திட அனைத்து மாவட்டச் செயலாளர்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

- என்று ஒருமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. நிறைவாக ஈரோடு மாநகர் மாவட்டத் தலைவர் கு.சேகர் நன்றி கூறினார்.

**காசு. நாகராசன்,**
துணைப் பொதுச்செயலாளர் (மேற்கு மண்டலம்)

# பேரவையின் வடக்கு மண்டலக் கூட்டம்



எதிர்வரும் ஜூலை 27 ஆம் நாள் மதுரையில் நடைபெற உள்ள பேரவையின் 16ஆவது பொதுக்குழு தொடர்பாக வடக்குமண்டல ஆலோசனைக் கூட்டம், 09.07.2025, புதன்கிழமை சென்னை பேரவை அலுவலகத்தில் பொதுச்செயலாளர் சிற்பி செல்வராஜ் தலைமையில், துணைப்பொதுச்செயலாளர் உமா முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்டப் பொறுப்பாளர்களும் தலைமை நிலையச் செயலாளர் எட்வின் ஆகியோரும் கலந்து கொண்டனர். பேசப்பட்டவை :

1) ஒவ்வொரு மாவட்டமும் முழுமையான உறுப்பினர் பட்டியலைத் தயார் செய்து, அவர்களின் உறுப்பினர் கட்டணம் ரூ.100, திராவிட முழக்கம் சந்தா ரூ.400 கட்டியிருப்பதை உறுதி செய்வதோடு, திராவிடம் 100 வலையொளியை 'சப்ஸ்கிரைப்' செய்வதும் உறுதி செய்ய வேண்டும். இவை மூன்றும் உறுப்பினர்களின் அடிப்படைக் கடமைகள்.

2) கடந்த ஆண்டின் மாவட்டங்களின் அமைப்புச் செயல்பாடுகளை விரிவான அறிக்கையாகத் துணைப்பொதுச் செயலாளருக்கு அனுப்புவதுடன், அந்த அரிக்கையைப் பொதுக்குழுவில் முன்வைக்க வேண்டும். அமைப்புச் செயல்பாடுகள் என்பதில், புதிய உறுப்பினர் சேர்க்கை, திராவிட முழக்கம் சந்தா சேர்ப்பு, நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை அடங்கும்.

3) ஒவ்வொரு மாவட்டத்திலும் திராவிட முழக்கம் வாசகர் வட்டம் உருவாக்க வேண்டும் உள்ளிட்டவைகள் குறித்தும் பேசப்பட்டன.

**- இரா. உமா,**
துணைப் பொதுச்செயலாளர், (வடக்கு மண்டலம்)

# எடப்பாடியின் ரோட் ஷோவா? எடப்பாடியே ரோட்டில் ஷோவா?

சாரதாதேவி



"ஓரணியில் தமிழ்நாடு" என முதலமைச்சர் 04.07.2025 முதல் வீடு வீடாகவும், சாலைகளில் மக்களைச் சந்தித்து, மக்களுடன் கைகுலுக்கி அரசின் திட்டங்களையும் ஒன்றிய அரசின் துரோகங்களையும் விளக்கியும், அனைத்துத் தி.மு.க நிர்வாகிகளுக்கும் உத்தரவு பிறப்பித்துத்துத் தானும் மக்களைச் சந்தித்து வருகிறார்.

தேர்தல் வருகிறதே, அவர் ஏதேதோ செய்கிறார். நீங்கள் வீட்டிலேயே இருந்தால் எப்படி? என எடப்பாடியை உசுப்பிவிட்டார்கள் போல. அவரும் "மக்களைக் காப்போம்! தமிழகத்தை மீட்போம்" என்று இறங்கிவிட்டார். முதல்வர் போனால் மக்கள் கூடுகிறார்கள். சந்திப்பு நடக்கிறது. எடப்பாடியார் போனால், ரசிகர்கள் கூடுகிறார்கள். ஆட்டம் பாட்டமும் நடக்கின்றன. கூடவே சரவெடியாக காமெடியும் தான்! உதவி: அவரே தான்!

கொங்கு மண்டலம் தன்னுடைய கோட்டை என நினைத்து அங்கு தொடங்கி இருக்கிறார் தன்னுடைய உளறல்களை! கொஞ்சம் நஞ்சம் திராவிடச் சிந்தனை இவர்களிடம் ஒட்டி இருக்கிறது என்ற மக்களின் நினைப்பையும் சிதறடித்து வருகிறார் அவர். கோயில்களில் வரும் பணத்தை எடுத்துக் கல்லூரிகள் கட்டுகிறதாம் அரசு. இதை சதிச் செயலாகப் பார்க்கிறார்களாம் மக்கள். தமிழ் நாட்டு மக்களை இவ்வளவும் தான் புரிந்து வைத்திருக்கிறார்களா? அல்லது முழுக்க பா.ஜ.க. காரராக மாறிவிட்டாரா? எச்.ராஜா வுக்கு சற்றும் சளைப்பில்லாமல் பேசும் எடப்பாடிக்கு மக்கள் அளிக்கப் போகும் பதில் தான் 2026 தேர்தல்.

தமிழ் நாட்டில், முன்னாள் அ.தி.மு.க. முதல்வர் எம். ஜி.ஆர் தொடங்கிய பழனியாண்டவர் தொழில் நுட்பக் கல்லூரி உள்ளிட்ட 6 கல்லூரிகள், 48 பள்ளிகள் என 54 கல்வி நிலையங்கள் இந்து அறநிலையத் துறையின் பொருளால் நிர்வகிக்கப்படுகின்றன. "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" ஆலயம் பதினாயிரம் நாட்டலைக் காட்டிலும் புண்ணியமாகச் சொன்ன மண்ணல்லவா இது? தமிழ் நாட்டு மக்கள் கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தால் தான் இன்று நாட்டில், உயர் கல்வியில் மிக உயர்ந்த இடத்தை தமிழ் நாடு அடைந்துள்ளது. இவை எல்லாம் எடப்பாடிக்கு தெரியாதா? அல்லது தமிழ் நாட்டு மக்களை அடகு வைத்துத் தன் தனிப்பட்ட வழக்குகளிலிருந்து விடுவித்துக் கொள்ள பா.ஜ.க வின் குரலாக மாறி வருகிறாரா?

இன்னொரு கூட்டத்தில், பெண்களுக்கு கொடுக்கப்படும் ரூ.1000/- உதவித் தொகையை இவர்கள் போராடிய பிறகு 28 மாதங்கள் கழித்துதான் கொடுத்தார்கள் என்று அடித்து விடுகிறார். இவர்கள் எங்கே போராடினார்கள்? போராடுவதற்கு இது இவர்கள் கொண்டு வந்த திட்டமும் அல்லவே? மகளிர் உதவித்திட்டம் 1.06 கோடி பெண்களுக்கு எந்தப் போராட்டமும் இல்லாமல் தான் கொடுக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக கூடுதலாக தகுதியான பெண்களுக்கும் வழங்க இப்போது அறிவிப்பு விடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!
கருஞ்சட்டைத் தமிழர்

## கோட்சே வழி வேண்டாம்

'மதச்சார்பின்மை' - 'சோசலிசம்' ஆகிய இரண்டு சொற்களும் இந்திய அரசியல் சாசன முகவுரையில் முன்பு இல்லை, அவை பின்னர் சேர்க்கப்பட்டன. அவற்றை நீக்க வேண்டும் என்று அவசரநிலை பிரகடனம் 50ஆம் ஆண்டு நிகழ்ச்சியின் போது ஆர்எஸ்எஸ் பொதுச் செயலாளர் தத்தாத்ரேய ஹோசபாலே கூறியிருந்தார்.

இந்திய அரசியலமைப்பில், 1976 ஆம் ஆண்டு, 42 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் 'சோசலிச, மதச்சார்பற்ற' என்ற சொற்கள் சேர்க்கப்பட்டன. இதற்கு எதிராக சுப்பிரமணியன் சுவாமி, வழக்கறிஞர் அஸ்வினி குமார் உபாத்யாய, பல்ராம் சிங் உச்சநீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில், நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, சஞ்சய்குமார் ஆகியோரின் அமர்வு, 42ஆம் சட்டத் திருத்தம் செல்லும் என்று 25-11-2024 அன்று தீர்ப்பளித்தது. ஆனாலும் அவர்கள் விடுவதாக இல்லை.

சோசலிசம், மதச்சார்பற்ற என்ற இருசொற்களின் ஆணிவேர், சமூகநீதி. இந்தச் சமூகநீதிக்காகத்தான் தந்தை பெரியாரின் நெடிய போராட்டப் பாதையில், களத்தில் நாம் நின்றுகொண்டு இருக்கிறோம்.

ஆனால் இனக்கலவரம், மதக்கலவரம், சாதிய மோதல்கள், வேல் ஊர்வலம், முருகன் மாநாடு என்று மதத்தை வைத்து சமூகநீதியைப் பிளக்கப் பார்க்கிறது காவிகள் கூட்டம்.

பல்வேறு இனங்கள், மொழிகள், பண்பாடுகள் கொண்ட மக்கள், வேற்றுமையில் ஒற்றுமையைப் பார்க்கிறார்கள் இந்திய ஒன்றியத்தில்.

இந்த ஒற்றுமையில் வேற்றுமையைத் திணிக்கத் தடையாக இருப்பவை மதச்சார்பு இல்லாமை, சோசலிசம்.

காந்தியடிகளின் கருத்துகளில் சில வேறுபாடுகள் இருந்தாலும், அவரின் மதச்சார்பற்ற தன்மையை மறுக்க முடியாது.

அவரைச் சுட்டுக் கொன்றவன் கோட்சே!

காந்தி வழி, அம்பேத்கர் வழி, பெரியார் வழி என்று நமக்கான பல வழிகள் இருக்கும்போது, மாணவர்கள் ஒருபோதும் 'கோட்சே கூட்டத்தின்' வழியில் சென்றுவிடக்கூடாது, என்று திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பேசியிருக்கிறர் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

இது எதிர்காலச் சந்ததியரான மாணவர்கள் மீதுள்ள அக்கறை என்றால் மிகையில்லை!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

போகும் வழி எல்லாம், “கொத்தமல்லி என்ன விலை?”, “நிலக்கடலை என்ன விலை?”, “எலுமிச்சை சாறு கொடுப்பா”, “ஆம்புலன்ஸுக்கு வழி விடுப்பா” என மக்களோடு இருப்பதாக பாவித்துக் காட்டும் எடப்பாடியாரே உங்கள் கறைகள் இன்னும் அழியவில்லை. நீட், புதிய கல்விக் கொள்கை, உதய் மின் கட்டணக் கொள்ளை, ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு, பொள்ளாச்சி பாலியல் கொடுமை என எதுவும் மக்கள் மனங்களில் இருந்து அகலவில்லை. உங்கள் பா.ஜ.க வுடனான கூட்டும் இப்போது நீங்கள் போட்டிருக்கும் சங்கி வேடமும் உங்கள் மகனைக் காப்பாற்ற நீங்கள் கட்சியையும் தியாகம் செய்ய தயாராகிவிட்டதை மக்களிடம் காட்டிக் கொடுக்குமே ஒழிய உங்களுக்கு எந்த பலனையும் தராது.

மதுரையில் முருக பக்தர் மாநாட்டில், பா.ஜ.க.வினர்,' அ.தி.மு.கவினர் முன்னிலையில், அ.தி.மு.கவின் கொள்கைத் தலைவர்களையும், பெரியார் மற்றும் அண்ணாவையே “அதர்மம்” என்றும் “நாத்திக நரிகள்” என்றும் காணொளிக் காட்சி வெளியிட்டதைக் கூட கண்டிக்காத எடப்பாடியார், கூட்டணி முதல்வரை பா.ஜ.க தான் முடிவு செய்யும் என்று சொல்வதற்கு வாலைக் குழைக்கும் இவர், கட்சியை எப்படி பா.ஜ.க. விடமிருந்து காப்பாற்றுவார்? கட்சியையே காப்பாற்றாதவர் எப்படி மக்களைக் காப்பாற்றுவார்? அடகு வைத்த கட்சியையே அமித்ஷாவிடமிருந்து மீட்காதவர் எப்படி தமிழகத்தை மீட்பார்?

உள்ளபடியே, இன்று அ.தி.மு.க.வின் மீது தி.மு.க விற்கும், தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கும் இருக்கும் அக்கறையில் ஒரு துளி கூட எடப்பாடியாருக்கு இல்லை என்பதே உண்மை. பல்வேறு ஊழல் மற்றும் குற்றவியல் வழக்குகளால் சிக்கவைக்கப்பட்டிருக்கும் அ.தி.மு.க தலைமையும் அதன் அடிபொடிகளும் தன்மானத்தை இழந்து என்ன செய்தாலும் அவர்களுடைய சுற்றுப்பயணம் சந்திப்பாக, மாறாது. அது வெற்றுக் காட்சியாகவே முடியும்!

எடப்பாடியார் ரோட் ஷோவுக்குப் போகவில்லை, 'ரோட்டில் ஷோ'வாகப் போகிறார்.